(7) அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.